# டெங்கி



டெங்கி காய்ச்சல் என்பது டெங்கி நச்சுக் கிருமிகளால் ஏற்படும் ஒரு கடுமையான தொற்றுநோயாகும். ஏடிஸ் கொசு கடிப்பதால் இந்நோய் பரவி தொற்றுகிறது.

**டெங்கி காய்ச்சலை குணப்படுத்த இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே முன்னெச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகும்.**

## டெங்கி காய்ச்சலின் அறிகுறிகள்

- திடீரென ஏற்படும் கடுமையான இடைவிடாத காய்ச்சல்.
- தோலில் சிவந்த வேர்க்குருக்கள்.
- எலும்புகள், தசைகள், மூட்டுகள், கண்விழிகள், தலை முதலான பகுதிகளில் கடுமையான வலி.
- பசியின்மை.
- வாந்தி ஏற்படும்.
- வயிற்று வலி.
- உடம்பு, மூக்கு, வாயில் இருந்து ரத்தம் கசியும்.

## ஏடிஸ் கொசுக்களின் தன்மைகள்

- கால்களில் கருப்பு மற்றும் வெள்ளைக் கோடுகள்.
- பொதுவாக அதிகாலையிலும் அந்தி வேளைகளிலும் கடிக்கும்.
- ஏடிஸ் கொசுக்கள் வீட்டுக்குள்ளும் வெளியிலும் தெளிந்த, தேங்கிய நீரில் வளரக் கூடியவை.
- ஏடிஸ் கொசு ஒரே (1) வாரத்தில் முட்டையாகி, புழுவாகி, பூச்சாகி, கொசுவாக வளர்கிறது.

## கட்டுப்பாடும் முன்னேற்பாடுகளும்

### A. கொசு உற்பத்தியாவதைத் தடுப்பதற்கு

- எல்லா தண்ணீர் சேமிப்புப் பாத்திரங்களையும் மூடி வைப்பதன் மூலம் அதில் கொசு உற்பத்தியாகாமல் தடுக்க முடியும்.
- வாரம் ஒருமுறை ஜாடிகள், பூத்தொட்டிகள் மற்றும் குளியல் தொட்டிகளில் உள்ள நீரை மாற்றி, சுத்தமாக துப்புரவு செய்யுங்கள்.
- வடிகால் குழாய்களை சுத்தம் செய்யுங்கள்.
- பயன்படுத்தப்படாத டயர்கள், காலி டப்பாக்கள், காலி போத்தல்கள் போன்றவை தண்ணீர் தேங்கும் இடங்களாகும், இவற்றில் ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகாமல் இருப்பதை உறுதிப்படுத்த, அவற்றில் தேங்கி நிற்கும் தண்ணீரை அப்புறப்படுத்துங்கள்.
- தண்ணீர் கொள்கலன் பாத்திரங்களில் ‘எபேட்’ TEMEPHOS எனும் பூச்சிக்கொல்லி மருந்தை தண்ணீரில் (20 காலர் தண்ணீருக்கு 10 கிராம் மருந்து) கலந்து அடியுங்கள். புழு நிலையில் உள்ள ஏடிஸ் கொசுக்களை கொல்ல மூன்று மாதத்திற்கு ஒருமுறை இப்படி செய்து வரவேண்டும்.

### B. ஏடிஸ் கொசுக்களை கொல்லவும் இனவிருத்தி ஆகாமலும் இருக்க

- வீட்டில் கொசு மருந்து (ஏரோசெல்) அடியுங்கள்.
- ஜன்னல்களில் கொசு தடுப்பு வலைகளை பொருத்துங்கள்.

கொல்வோம் ஏடிஸ் கொசுவை மிக எளிது

பிரசுரித்தோர்:
தொற்று நோய்கள் பகுதி,
மலேசிய சுகாதார அமைச்சு
தொலைபேசி:03-8888 6252 தொலைநகல்:03-8888 6251

டெங்கி அறிகுறிகள் தென்பட்டால் சிகிச்சை பெறுங்கள் உடனடியாக

மேலும் விவரங்களுக்கு, அருகாமையில் உள்ள சுகாதார அலுவலகங்களை தொடர்பு கொள்ளவும்.